பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. கார்த்திகை, உரு 10—12—54 தளிர்—10

OFFICE OF ... BOOKS
11 JAN 1955
MADRAS

## இறையும்-நெறியும்

"ஒன்றதே பேரூர் வழியா றதற்குள
என்றதே போலும் இருமுச் சமயமும்
நன்றது தீதிது என்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே"

(திருமூலர்)

இறைவன் ஒருவனே. இறைவனை அடையும் நெறியும் அடிப்படையில் ஒன்றேயாயினும் அவ்வொரு நெறியில் பல வகைக் கவட்டைகள் தோன்றின கவட்டைகள் தோன்றுவதியல்பு. எந்தக் கவட்டையினைப் பற்றிச் சென்றாலும் அஃது ஒரு நெறியிலேயே சேர்ப்பிக்கும். இயற்கை இறைவனின் உடல். அவ்வியற்கையின் காரியமோ பலவிதமாகப் பிரிந்து நிற்றலால் உயிர்களின்—சிறப்பாக மக்களின்—புறத் தோற்ற அமைப்பு வழக்கம் ஒழுக்கம் எல்லாம் பல விதமாகப் பிரிந்து நிற்கின்றன. எனவே, சமயங்களும் பல விதமாகத் தோற்றமுறலாயின. மக்களின் புறத் தோற்ற அமைப்பு வழக்க ஒழுக்கங்கள் பன்மையாகக் கிடந்தாலும் அவை அவர்களது அக ஆன்மாவில் கிடப்பதில்லை. அங்கே ஒருமையே நின்று நிலவுகின்றது. அக ஒருமைக்குப் புறப் பன்மை வேண்டப்படுவதொன்று. புறப் பன்மையின் துணை கொண்டே அக ஒருமை காட்சி பெறுதல் வேண்டும். பன்மையில் ஒருமை காண்பதே தெளிந்த நிலை.

சமயங்கள் புறப் பன்மையின் தோற்றங்கள் போன்றன. அடிப்படைநெறி ஆன்ம ஒருமை போன்றது. இவை நெருங்கிய தொடர்புடையன. பிறப்பு, கல்வி, திருமணம், வாழ்க்கை முதலியன அத் தொடர்பினை நன்குணர்த்துவன. அவரவர் சமயம் நின்று ஒழுகுவார்க்கு அத் தொடர்பு விளங்கும்; சமயப் பூசலில் அது விளங்காது. புறச் சமயங்களைக் கொண்டு அக ஆன்ம நெறியை அடைய முயல்வதே அறிவுடைமையாம். தர்க்க வாதிகள் அக நாட்டம் உடையவராதல் அரிது. அக நாட்டத்துக்கென்று அமைந்துள்ள அரண்கள் சிதைந்தால் அந் நாட்டம் எவ்வாறு தோன்றும்? அவ் வக நாட்டமே ஆத்திகத்துக்கும் அமைதிக்கும் அடிப்படையாம். நல்ல ஆத்திக அமைதிக்குப் போர் கூடாது.

சமயப் பெரியோர்கள் அவ்வவ் விடத்தின் இயற்கை நிலைகட்கேற்ப—கால தேச வர்த்தமானங்கட்கு ஒப்ப—புறச் சமய வழக்க ஒழுக்கங்களை அறிவுறுத்தியதுடன் அமையாது அகத்துக்குரிய ஒருமையாம் பொதுமையையும் அறிவுறுத்திச் சென்றனர் பாமர உலகம் அவர்தம் அறிவுறுத்தல்களில் கருத்திருத்தாது பொதுமை அற வளர்ச்சிக்குத் தடையாக நிலவும். அத் தடையினைப் போக்க ஆங்காங்கு அவ்வப்போது அறக் கிளர்ச்சிகள் (வழிபாடு, தொண்டு போன்றவை) தோன்றுதல் வேண்டும். பெரியோர்கள் எண்ணிய எண்ணங்கள் அவ் வறக்கிளர்ச்சிக்குத் தோன்றாத் துணையாயிருந்து உலகு வாழ உயிர்கள் வாழ வழிகோலும்.

'மூர்த்தி'

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | செய, கார்த்திகை, | தளிர் |
|---|---|---|
| 7 | 10-12-54 வெள்ளி. | 10 |


## வழிபாடும் தொண்டும்

நிகழும் நவம்பர் 13௳ சென்னை வண்ணையம்பதியில் ஒரு திருவிழா நடந்தது. அந்தத் திருவிழாவை "ஆலயவழிபாடும் தொண்டும்" என்று அழைத்தார்கள். வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமைதோறும் இந்தச் சமயத் தொண்டைச் செய்து வருகிறார்கள். நடத்துகிறவர்கள் திருவருள் அடிப்படையில் மக்களுக்குப்பணியாற்றி வரும் திருக்குறள் செயலகத்தாராகிய மாம்பாக்கம் குருகுலத்தார். இந்தக் குருகுலத்தின் தலைவர் தன்னலம் கருதாச் சமயத்தொண்டர், ஆசிரியர் இளவழகனார் அவர்கள். தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும், சமயப் பணிக்கும் தம் வாழ்நாளையே அர்ப்பணம் செய்திருக்கும் சைவப் பெரியார். இவருடைய தலைமையின்கீழ்ச் சென்னைமா நகரின் ஒவ்வொரு பேட்டைகளிலும் ஆலய வழிபாடும் தொண்டும் பக்தி சிரத்தையுடன் மிகுந்த உற்சாகமாக நடைபெற்று வருகின்றன.

செந்தமிழ் நாடு, சிவபக்திச் செல்வத்தைப் பரப்புவதற்கே தம் வாழ்நாளை அர்ப்பணித்த நாயன்மார்களையும் சிவநேயச் செல்வர்களையும் பெற்றெடுத்த திருநாடல்லவா? அந்தப் பரம்பரையில் வந்த பெரியோர்கள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் "ஆலய வழிபாடும் தொண்டும்" நடக்கும் இடங்களில் எல்லாம் காண முடிகிறது.

ஆவணித் திங்கள் விநாயகர் சதுர்த்திப் புண்ணிய தினத்தன்று சென்னை பார்க் டவுன் பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் நமது அரும் பெருந் தலைவர் ராஜாஜி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் குருகுலத்தின் ஆலய வழிபாட்டுத் தொண்டைத் தொடர்ந்து பதினொரு வாரங்களாகச் சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆலயங்களில் நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு வாரத்திலும் இதற்குமுன் யாரும் கண்டிராத பெருமையுடன் சிறப்பாக நடத்துகிறார்கள்.

பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்த இந்த பக்தி செல்வத் திருத்தொண்டு முறையே தங்க கோட்டம், புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் ஆலயம், மயிலை கபாலீஸ்வரர் கோயில், சூளை சிதம்பரேஸ்வரர் ஆலயம், வேப்பேரி வேத விநாயகர் கோயில், குயப்பேட்டை கந்தப்பெருமான் கோயில், வியாசர்பாடி இரவீஸ்வரர் ஆலயம், வன்னிய தேனாம்பேட்டை பால சுப்பிரமணியர் ஆலயம், பெரம்பூர் பழனி ஆண்டவர் கோயில் முதலிய இறைவன் உறைவிடங்களில் எல்லாம் ஆண்டவன் வழிபாடாகவும் ஆலயத் தொண்டாகவும் நடைபெற்று வருகின்றன.

இந்த உத்தமத் திருப்பணியில் சைவப்பெரியார்கள் திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான், திரு, சச்சிதானந்தம் பிள்ளை, திரு, சங்கரவடிவேலுப் பிள்ளை ஆகியவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அத்துடன் ஆலயவழிபாட்டின் சிறப்பைப் பற்றியும் பக்திச் செல்வத்தின் பெருமையைப் பற்றியும் அருமையான சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தொண்டாற்றியிருக்கிறார்கள்.

நவம்பர் 13௳ சென்னை வண்ணையம்பதி கமல விநாயகர் என வழங்கும் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் நடந்த வழிபாட்டுத் தொண்டுத் திருவிழா ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாயிருந்தது. வண்ணையம்பதி தட்சிணாமூர்த் கோயிலிலிருந்து திருவள்ளுவர் பெருமான் இயற்றிய தெய்வத் திருக்குறளை அலங்கரித்த சிவிகையில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். ஊர்வலம் அந்தப் பேட்டையின் பல முக்கிய தெருக்கள் வழியாகக் காசி விஸ்வநாதர் ஆலயத்தை நோக்கிச் சென்றது. திருக்குறள் வைத்திருந்த அலங்கரித்த சிவி

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# பண்பு உள்ள மனிதன்

(கிண்டி இஞ்ஜினீயரிங் கல்லூரி மாணவர் சங்கக் கலாசார வார விழாவில்)

ராஜாஜி

'வெளி வேஷம் போடாமல் உண்மையாகவும், எதிலும் கட்டுப்பாடுடனும் நடந்துகொள்பவனே பண்புள்ளவன். எழுத்தறிவில்லாதவன் கூட பண்புடையவனாக திகழமுடியும் ஆகவே, படித்தவனோ அவனைவிட இன்னும் மேலானவனாக விளங்க முயற்சிக்கவேண்டும். இளைஞர்களாகிய நீங்கள் இப்போதே அம் முயற்சியை ஆரம்பித்து விடவேண்டும். பிறகு உங்கள் குழந்தைகளையும் அவ் வழியில் வளர்த்தால் இந்தியா கலாசாரம் நிறைந்த நாடாக மேலோங்கி உலகத்தையே கட்டி இழுக்கும் சக்தி பெறும்'

## நாயைப் பாருங்கள்!

ராஜாஜி மேலும் பேசியதாவது: ஓநாயின் வம்ச பரம்பரையில் பண்பட்டு வந்ததே நாம் பார்க்கும் நாய். அதற்கு ஓநாயின் ஆக்ரோஷமும், முரட்டு சுபாவங்களும் முன்பு உண்டு. ஆனால், வீட்டில் பழகப் பழக உண்மையாக உழைக்கும் பிராணியாக மாறிவிட்டது. சோறுபோட்டு வளர்ப்பவனைத் தெய்வமாகக் கொண்டாடி அவனிடம் அடங்கி ஒடுங்கி வாலாட்டி விஸ்வாசம் காட்டுகிறது. வாயில் குழந்தை கையை வைத்தால்கூட கடிக்கக்கூடாதென்ற கட்டுப்பாட்டையும் அதனிடம் காண்கிறோம். பல விஷயங்களில் நாய் மனிதனைவிட மேலானதாகவும் இருக்கிறது. இருந்தாலும் பண்புள்ள மனிதனை அதனுடன் ஒப்பிடலாம்!

## கலைவேறு, கலாசாரம் வேறு

சங்கீதம், நாட்டியம், ஓவியம், போன்ற சில லளித கலைகள் கற்றுக்கொண்டு விட்டால் மட்டும் பண்புள்ள மனிதனாகிவிட முடியாது அவை தெரியாமல் இருந்தாலும் பரவாயில்லை. தெரிந்தாலும் கலாசாரத்துக்கு அடையாளமாகாது; அவை வெறும் கலாயோக்கியதைகளே. அந்த யோக்கியதைகளை இளைஞர்களும் இளம் பெண்களும் பெறவேண்டியதுதான். அதனால் வாழ்வில் அவர்கள் இன்பம் காண முடியும். பிறருக்கும் மகிழ்வளிக்க முடியும். அந்த மட்டில் அவை நல்லவையே.

## அப்பியாசம் முக்கியம்

மனைவியை, குழந்தைகளை அடிப்பவனாகவோ, வேறு எவரையும் கொடுமைபடுத்துபவனாகவோ இருந்தால் அவன் பண்பாடுடையவனல்ல. அவனை மூர்க்கன் என்றே அழைப்பார்கள். பிறரிடம் கனிவு கொண்டு அன்பு காட்டவேண்டும். அவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுத்து கண்ணியமாக நடத்தவேண்டும். பண்புடைய மனிதனாக விளங்க எல்லோருக்கும் விருப்பம்தான். ஆனால், அப் பெயரை அடைய அப்பியாசம் அதிமுக்கியம். அடிமையாக இருந்தகாலத்தில் ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களை காப்பியடித்தால் நாகரிகம் நமக்கு வந்துவிடுமென எண்ணினோம். அந்நிலைமாறி இன்று சுதந்திர புருஷர்களாகத் திகழுகிறோம் ஆகவே நம்நாட்டு தலைவர்களிடம் காணும் சிறப்பான குணங்களை பின்பற்றி நாம் அப்பியசிக்க வேண்டும்.

## தர்ம சங்கடமானால் வழி என்ன?

பண்பு இல்லாதவன்தான் பொய் சொல்வான்; கோழையும் பொய் சொல்வான் தைரியசாலி முதலில் தன்னுள்ளிருக்கும் பயத்தை துடைத்தெரிய வேண்டும். எப்போதும் உண்மையாக இருக்கவே முயலவேண்டும். தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டால் பொய் சொல்லாமல் இருக்க முடியுமா என்று கேட்கலாம். அப்படியானால் உங்களிஷ்டப்படி நடந்து சமாளித்துக்கொள்ளுங்கள். ஆனால் உண்மையாக இருக்கவேண்டுமென்கிற உயர்ந்த உணர்வை மட்டும் இழந்துவிடாதீர்கள். ஹனுமானை சந்தித்துப் பேசிய சீதையை ராக்ஷசர்கள் அணுகிக் கேட்டபோது தாம் யாரையும் சந்திக்கவில்லையென பொய் சொன்னாள் சீதையே பொய் சொன்னாளே, நாம் ஏன் சொல்லக்கூடாதென சர்ச்சையைக் கிளப்புகிறவர்களும் இருக்கிறார்கள். சாதாரணமாக எப்போதுமே உண்மையாக நடந்து கொள்ளுங்கள் என்றுதான் நான் கூறுகிறேன். வீண் சர்ச்சை எதற்கு?

உணர்ச்சிகளை, குறிப்பாக காம உணர்ச்சிகளை அடக்கி ஆளுபவன்தான் பண்பட்ட மனிதன். ஆறேழு ஜிலேபி கொடுத்தால் அப்படியே முழுங்குபவன் காட்டுமிராண்டி. ஒன்றை உட்கொண்டு சுயக் கட்டுப்பாடுடன் இருந்தால் அவனே பண்புள்ளவன்.

### இஞ்சினியர்வேலை கிடைக்காவிட்டால்....?

தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் நம் நாட்டில் குறைவு நமக்கு இஞ்ஜினீயர்கள் இன்னும அதிகமாக தேவை. ஆனால், படித்து தேறினல் வேலை அகப்படுமா என்ற பிரச்சனை முன் நிற்கிறது. நீங்கள் எஞ்ஜினீயர் வேலைக்குத்தான் போகவேண்டுமென்பதில்லை. ஓர் பத்திரிகையில் துணை ஆசிரியாக நுழைந்தால் படிப்பை வீணாக்கிவிட்டதாக நினைக்காதீர்கள். வேலை கிடைக்காத டாக்டர்களும், இஞ்ஜினீயர்களும், பள்ளி ஆசிரியர்களும் பத்திரிகையாளர்களாக மாறினல் பத்திரிகைத் தொழிலும் மேம்படும். உதாரணமாக இஞ்ஜினீயர் தாம் கற்றதைப் பற்றி எழுதினல் இப்போதிருப்பதைவிட விஷயம் இன்னும் சரிவா இருக்கும் ஆகவே நஷ்டம் எதும் இல்லை. இஞ்ஜினீயரிங் படிப்பே பொது கல்விதான். ஏன்? விஞ்ஞான கல்வியே கலாசார கல்விதான்.

### ஹாஸ்யத்தில் தமிழை மிஞ்சமுடியுமா?

'இலக்கியத்தில் ஹாஸ்யம்' என்பதைப் பற்றி பிரிட்டிஷ்காரர் ஒருவர் இவ்விழாவில் பேசவிருக்கிறார். நம்பண்டைய இலக்கியங்களுக்குள் நாடகங்கள்தான் ஹாஸ்யத்தை ஏக போக உரிமையாக்கிக்கொண்டிருக்கின்றன. நவீன இலக்கியங்களில் காணும் நளினமான ஹாஸ்யம் அவற்றில் கிடையாது. சென்னை மாணவர்களுக்கு ஹாஸ்ய உணர்ச்சி அபாரம். அந்த பிரிட்டிஷ்காரர்கள்தான் உங்களிடமிருந்து ஏதாவது கற்றுச் செல்லவேண்டுமென நினைக்கிறேன். ஹாஸ்யம்தான் சந்தோஷ வாழ்வுக்கு வழி; ஹாஸ்யம் சாகக் கூடாது. அது ஓர் அரிய பொக்கிஷம். தமிழ் நாடு அதை நிரம்பப் பெற்று பாதுகாத்து வந்துள்ளது. இதரர்களைவிட தமிழர்கள்தான் இவ்விஷயத்தில் முன் நிற்கிறார்கள்.

புஸ்தக படிப்பு மட்டும் போதாது பிரசங்கங்களை கேட்பதும் போதாது. பிறருக்கு உதாரண புருஷர்களாக விளங்க நீங்களே அவற்றின்படி நடந்து காட்டவேண்டும். உங்கள் சங்கம் கிரியாம்சையில் நன்ருக இருந்தால் வருடங்கள் ஓட ஓட வலுப்பெறுவது நிச்சயம்.

—சு

## சாந்திநெறியால் இறுதி வெற்றி

'லட்சியங்களில் மாத்திரமன்றி, அதை அடையக் கையாளும் சாதனங்களிலும், சாதனைகளில் மாத்திரமன்றி அதை அடையும் முறைகளிலும் எங்களுக்கு அக்கரையுண்டு. சமாதானகரமான அரசியல் நடைமுறைகள் மூலம் சுதந்திரம் பெற்று எங்கள் தேசத்தை ஐக்யப்படுத்தினேம். இப்போது எங்கள் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயன்று வருகிறோம்.

இந்த முறைகள் தவக்கமும், அலுப்பூட்டுவதுமாயிருந்தபோதிலும், பலன்தரத் தொடங்கிவிட்டால் துரிதமாக வேலை செய்யும். பலாத்காரத்திற்குப் பதில் மனமாறுதலையும், ஆதிக்க அரசியலுக்குப் பதில், சகோதாரத்வ அரசியலையும் ஏற்படுத்தும் முயற்சியில் நாங்கள் தோல்வியுற்றாலும் அவை தற்காலிகமாகத்தான் இருக்குமென்பதே எங்கள் எண்ணம். ஏனென்றால் பிரிக்ருதியே நல்லசுவாபமானது தான் கல்மனமும், துவேஷமும் எப்படித் தொற்றிக் கொள்ளுமோ அது போன்றே கருணையும் அன்பும் நாம் பழகுபவரிடத்திலும் பிரதிபலிக்கும்.

சமாதான முறைகள் மூலம் நாங்கள் சாஸ்வத பலன் எய்தியிருப்பதற்கு எங்கள் புரா்தன வரலாறுகளும் சமீப சரித்திரமுமே சான்று பகரும். முடிச்சுகளை கட்டாரி கொண்டு வெட்டத் தேவையில்லை அவற்றை அவிழ்ப்பதற்குப் பொறுமைதான் வேண்டும்.

போதிய அவகாசமும் பொறுமையும் இருந்தால் மனித சுபாவத்திலும், அதன் பிரதிபிம்பமான சமூகத்திலும் தீவிரமாறுதல்கள் ஏற்படலாம்' என்று கூறியதுடன் அமெரிக்காவிலிருப்பதைப் போன்ற மேல் சபைக்குத் தாம் தலைவர் என்றும், தாமஸ் ஜெப்பர்ஸன் போதித்த நீதி, சுதந்திரம், சமத்வம், சகோரத்வம் ஆகிய லட்சியங்கள் இந்திய அரசியலமைப்பிலும் இடம் பெற்றிருப்பதாயும் எடுத்துரைத்தார்.

—இந்திய ஜனாதிபதி
திரு. ராதாகிருஷ்ணன்.
(யு. எஸ். ஸெனேட் சபையில்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

# தென்னிந்திய இசை உலகம்

சுருதியைக் குறித்துத் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் மிகவும் குழப்பமடைந்திருக்கின்றதனால் கர்த்தா ராகங்கள் 72 தானா அல்லது 32 தானா? என்கிற அடிப்படை விஷயத்திலேயே இன்னும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. சங்கீதத்திற்கே அடிப்படையான இவ் விஷயத்தைப் பற்றித்தான் மியூஸிக் அகடெமி முதலில் முடிவுகாணவேண்டும். பின்னர்தான் மற்ற விஷயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆனால் அது முன்னர் செய்வதை விட்டுவிட்டுப் பின்னர் செய்வதை முன்னே செய்வது சங்கீத உலகுக்கே நன்மையாகாது.

தமிழிசைச் சங்கமும் மியூஸிக் அகடெமிபோல சமீப காலத்திலேயே சங்கீத ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறது. இச்சங்கமாவது சுருதிகள் எத்தனை என்பதை முதலில் ஆராய்ந்ததா? தமிழிசையில் பல பண்கள் இருக்கின்றன.

ஆனால் அவைகளுக்கு இன்னென்ன ஆரோஹணம், அவரோஹணம் என்பதை அறிவிக்கும் இசை இலக்கண நூல்கள் இல்லை. அவைகள் அழிந்து போயின, எஞ்சியிருக்கும் பண்டைய நூல்களில் பண்களின் பெயர்கள்தான் குறிக்கப்பட்டுள்ளன.

திரு T. A. சம்பந்தமூர்த்தி அவர்கள் தமிழிசைக்காக மிகவும் பாடுபட்டுப்பல இசைநூல்கள் இயற்றியுள்ளதை இசை உலகம் நன்கு அறியும்.

கர்ண பரம்பரையைக் கொண்டே அப்பண்களை முடிவு கட்டுவது என்ற கொள்கை அவ்வாறு வரவேற்கத்தக்க தொன்றன்று. எவ்வளவு முறை (ராகமுறை) மாறிப்பாடினார் (சுர ஞானம் இல்லாமல் பாடினும்) அப்பிழையையும் சிறந்த பண் ஆகக்கொண்டு முடிவு செல்கின்றது. ஆனால் அது உலகியலுக்கு ஒவ்வாததாகும்.

பண் என்பதில் பொருளை அதன் சுர இலக்கணங்கள் முதலியவைகளை இயலிசை வல்லார் தொடர்பு (இன்னமும் பலர் தொடர்பு) கொண்டு ஆராய்ந்து காணவேண்டுவது சிறந்த முறையாகும்.

நான்கண்ட அளவில் வாய்ப்பாட்டில், மதுரைமணி ஐயர் அவர்கள் ஜி என். பி அவர்கள், லய சம்பந்தமாக ஆலத்தூர், சகோதரர்கள் போன்ற சிலரே புதுமையான அம்ஸத்தைப் பெற்றவர்களாவர்

தமிழ்ப்பாட்டில், மதுரை மாரியப்ப சாமிகள் இசை அரசு மதுரை M. M. தண்டபாணி தேசிகரவர்கள், வேலூர், T. A. சம்பந்த மூர்த்தி ஆச்சாரி, போன்ற சிலரிடமே பாட்டின் புதுமையைக் காணலாம்.

புல்லாங்குழலில் சிலர் சிறந்த திறனைப் பெற்றிருந்தும் அவர்களுள்ளும் சிறந்து விளங்குபவர் புல்லாங்குழல் மகாலிங்கம் ஒருவரேயாவர். இவருடைய குழல் நாதம் தனிப்பட்ட அம்ஸமாகும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமாகும்.

பிடிலில், கும்பகோணம், ராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள், மதராஸ் பாலகிருஷ்ண அய்யரவர்கள், மைசூர் சௌடய்யா அவர்கள் போன்ற சிலர் புகழ் பெற்றவர்களாயினும் வாசிப்பில் பழமையானவர்களே. தற்காலத்தில் சிறந்த முறையில் புதுமையோடு வாசிப்பவர்களுள் பரூர், சுந்தரம் அய்யரவர்கள் குமரர் பரூர், கோபால கிருஷ்ணன், லால்குடி, ஜெயராமன், நெல்லை, மணி அய்யர், R. S. கோபால கிருஷ்ணன், கோவிந்தசாமி நாயக்கர், திருச்சி, கணேசம் பிள்ளை, திருவள்ளூர், சுப்பிரமணியம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்,

மிருதங்கத்திலும் பலர் அறிவு வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுள் பாலக்காடு, மணி அய்யர், பழநி, சுப்பிரமணிய பிள்ளை, ராமநாதபுரம், முருகபூபதி, குற்றாலம் சிவவடிவேல் பிள்ளை, கோயமுத்தூர், ராமசாமி பிள்ளை, S. V. S. நாராயணன், மதராஸ், கண்ணன், தஞ்சை, கிருஷ்ணமூர்த்தி ராவ், தஞ்சை, மூர்த்தி, C. V. வீருசாமி, மதுரை, விஜயரங்கம், மதுரை, கிருஷ்ண அய்யங்கார், குஞ்சுமணி அய்யர் போன்ற மற்றும் சிலர்.

கடத்தில், வில்வாத்திரி அய்யர், ஆலங்குடி, ராமச்சந்திர அய்யர் போன்ற சிலரும் கொனக்கோவில், வைத்தியலிங்கம் பிள்ளை, ஒருவரே சிறந்தவர். இன்னும் பலர் சிற்சில இசைக் கருவிகளை வாசிக்கும் திறனைப் பெற்றிருக்கிறார்கள்.

பெண்ணுலகில் வாய்ப்பாட்டில்:—M. L. வசந்தகுமாரி, M. S. சுப்புலக்ஷ்மி, D. K. பட்டம்மாள் முதலியவர்களும். பிடிலில் பானுமதி போன்ற சிலரும், மிருதங்கத்தில் திருக்கோகாணம்,

ரங்கநாயகி, திருச்சூர், சங்கர மேனன் குமாரத்தி ஜானகி போன்றவர்களும் நாதசுரத்தில் மதுரை பொன்னுத்தாயி, அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பதங்களை சரியான உச்சரிப்புடன் (பொருள் விளங்குமாறு) பாடு முறையில் M. K. தியாகராஜ பாகவதரவர்கள், K. B. சுந்தராம்பாள் அவர்கள், M. M. தண்டபாணி தேசிகரவர்கள், மாரியப்பசாமிகள், T. A. சம்பந்தமூர்த்தி முதலியோர் சிறந்தவர்களாவர்.

நாம் படிக்கவேண்டிய
முக்கிய இசைநூல்கள்.

மதுரை, நாதஸ்வர மகாவித்வான், பொன்னுசாமி பிள்ளை, அவர்கள் இயற்றிய "பூர்வீக சங்கீத உண்மை".

தஞ்சை, பேரறிஞர் ஆபிரகாம் பண்டிதரவர்கள், இயற்றிய "கருணாமிருத சேகரம்."

வேலூர், T. A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார், இயற்றிய 'இராகமாலை' "சுருதிபேத இசை விளக்கம்" "தமிழிசையின் தொன்மை".

நாதசுரத்தில் சிறந்த அறிஞர்கள் பலர்தென்னிந்தியாவிலேயே உள்ளனர். அவர்களுள்ளும் தலை சிறந்து விளங்குபவர் நாதஸ்வர ரத்னாகரம், திருவாவடுதுறை T. N. இராஜரத்தினம் பிள்ளை ஆவார்கள்.

மற்றும் புகழ் பெற்றவர்கள், திருவெண்காடு, சுப்பிரமணிய பிள்ளை, காருகுறிச்சி, அருணாசலம், கக்காயி, நடராஜ சுந்தரம் பிள்ளை, குளிக்கரை பிச்சையப்பா பிள்ளை, குளிக்கரை காளிதாஸ் பிள்ளை, தருமபுரம் அபிராம சுந்தர பிள்ளையும், அவர் மகனும், திருவிடைமருதூர், வீருசாமி பிள்ளை போன்ற மற்றும் சிலரும், தவிலில் இராகவப் பிள்ளை, முத்துவீருப் பிள்ளை, தங்கவேல் பிள்ளை, குராடு, கோவிந்தராஜப் பிள்ளை போன்ற சிலருமே யாவார்கள்.

கர்த்தா ராகங்கள்
முப்பத்திரண்டே

"பூர்வீக சங்கித உண்மை" என்னும் நூலாசிரியரான நாதஸ்வர வித்வான் மதுரை, பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் ஆதாரங்களோடு கர்த்தா ராகங்கள் 32 தான் என முன்பே வெளிப்படுத்தினர். இக் கொள்கையை ஆதரித்தே C, R. சீனிவாச அய்யங்கார், அரிகேச நல்லூர், முத்தையா பாகவதர், உமையாள்புரம் பஞ்சாபகேச பாகவதர், திருச்சிபிடில் கோவிந்த சாமி பிள்ளை, பல்லடம் புல்லாங்குழல் சஞ்சீவி ராவ், கல்லிடைக்குறிச்சி வேதாந்தம் அய்யர், காவேரிப் பட்டணம் K. வரதாச்சாரியார், பெருங்குளம் ஸ்ரீனிவாச அய்யங்கார், வைணீக வித்வான்கள். காரைக்குடி சாம்பசிவ அய்யர், சுப்பராம அய்யர், கரூர் பிடில் சின்னசாமி அய்யர் ஆகிய பிரபல வித்துவான்களும் 32 தான் எனப் பாராட்டுரைகள் வழங்கி இருக்கின்றனர்.

'சுருதிபேத இசை விளக்கம்" என்னும் இசை நூலாசிரியரான T. A. சம்பந்தமூர்த்தியவர்கள், ஸ்தான மல்லாத ஸ்தானங்களைக் கொண்டுள்ள போலி ஸ்வரங்களை அதாவது சுத்த காந்தாரம், ஷட்ஸ்ருதி ரிஷபம், சுத்த நிஷாதம், ஷட்ஸ்ருதி தைவதம் ஆகிய ஸ்வரங்களை விடுத்து, சுருதி பேதங்களை விளக்கியுள்ளார்.

—தே.

## செய்திகள்

மோகலாய சக்கரவர்த்தியின்
தமிழ் சாஸனம்

மொகலாய சக்கரவர்த்தியின் பேரப் பிள்ளையான பரூக்ஸியார்க் (கி. பி. 1713-1719) ஒரு முஸ்லிம் மன்னருக்கு ஹிக் அப் பட்டங்கள் அளித்த சாஸனம் ஒன்று ஷோலிங்கரில் இந்தியசர்க்கார் எபிகிராபிக் இலாகாவினல் பிரதி எடுக்கப் பட்டுள்ளது.

பரூக்ஸியார் பலவீனமான ஆட்சி நடத்தியதில் அவருடைய சகோதரர்களே அவரைக் கொன்றுவிட்டு நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு விட்டனர்.

* * *

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை. 1

## திரு. வி. க. தமிழ்க்கல்லூரி

திரு. வி. க. இலக்கிய மன்றத்தின் சார்பில் உள்ள திரு வி. க தமிழ்க் கல்லூரியில் வித்துவான் வகுப்பு இலவசமாக வண்ணை ஸர் தியாகராயா கல்லூரியில் மாலை 6மணி முதல் 8-30 வரை நடைபெறுகிறது. வகுப்பு விவரம் பின்வருமாறு:—

திங்கள்–திருவிளையாடல் புராணம்–வித்துவான் வடமலை.

செய்வாய் – குற்றலக் குறவஞ்சி– ஸ்ரீ டி. எம். குமாரசாமி.

புதன் – தண்டியலங்காரம்–வித்துவான் நமச்சிவாயம்.

வியாழன்– புறப்பொருள் வெண்பாமாலை-வித்துவான் பாலசுந்தரம்.

வெள்ளி–நன்னூல், மதுரைக் கலம்பகம்-வித்துவான் ராமநாதன்.

* * *

## "நல்ல மனிதர்களாக தெய்வபக்தியுள்ளவர்களாக வாழவேண்டும்"

(மாம்பாக்கம் குருகுலத்தார் வழிபாட்டில் மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் அறிவுரை)

மாம்பாக்கம் குருகுலத்தின் ஆதரவில் நேற்று திருவல்லிக்கேணி திருவட்டீஸ்வரர் கோயிலில் பிற்பகலில் குருகுலத்தார் வழிபாடும் தொண்டும் நடைபெற்றது. மூன்று மணிக்கு ஆறுமுகப் பெருமனுக்கு விபூதிக் காப்பு நடை பெற்றது. ஐந்து மணிக்குத் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் தலைமையில் குருகுலத்தார் ஊர்வலம் நடைபெற்றது.

பிறகு, மாலை 6-30 மணிக்கு கோயிலில் நிதி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் தலைமையில் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் பேசுகையில், ஆஸ்திகப் பிரசாரம் செய்து மக்களுக்கு நல்வழி காட்டிவரும் ராஜாஜிக்கு நாமெல்லோரும் நன்றியைச் செலுத்த வேண்டுமென்றும், நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் பக்தி வழியில் சிறந்த நாடகங்களால் ஞானத்தைப் புகட்டக் கூடிய வகையில் தொண்டு செய்து வருவதற்கு அவரைப் பாராட்டவேண்டுமென்றும், இப்பொழுது இங்கு நடப்பது போல் வழிபாடுகளும் பக்திக் கூட்டங்களும் பேட்டைகள் தோறும் நடைபெற வேண்டுமென்றும், மக்கள் பழைய பண்பாட்டினைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், அதற்கு இது போன்ற விழாக்கள் உற்சவங்கள் எடுத்துக் காட்டாகுமென்றும், கூட்டுப் பிரார்த்தனையால் ஒற்றுமையை, உணர்ச்சிகளை ஒவ்வொருவர் மனதிலும் உண்டு பண்ண முடியுமென்றும் எடுத்துரைத்தார்.

ஸ்ரீ கே. எஸ். ஏகாம்பரம் பிறகு பேசுகையில், ஆண்டவனுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்றால் புறம் பேசாமல் இருக்கவேண்டுமென்றும், கெட்டது இருந்தால்தான் நல்லது தெரியுமென்றும், அது போல்தான் நாஸ்திகமென்றும் இப்பொழுது நடைபெறும் நாஸ்திகப் பிரசாரத்திற்கெல்லாம் அஞ்சவேண்டாமென்றும் கூறினர்.

### ஸ்ரீ சுப்பிரமணியம்

மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் பிறகு பேசியதாவது:— பக்தி மார்க்கத்தில் இளவழகனர் பெரும் தொண்டு செய்து வருகிறார். மக்கள் நல்வழியில் நடந்து நல்ல நிலைமை அடைய அவர் பெருத்த சேவை செய்துவருகிறார். மக்களிடையே மகிழ்ச்சி எப்பொழுது ஏற்படுமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நல்ல மக்களிடம் செல்வமும் சக்தியும் கிடைத்தால் அவை நல்ல முறையில் உபயோகமாகின்றன. கெட்டவர்களிடம் அவை இருந்தால் கெட்ட மார்க்கத்தில் அவை உபயோகிக்கப்பட்டு மக்கள் துக்கப்படுகிறார்கள். பொருளாதாரத்தால் மட்டும் சந்தோஷ வாழ்க்கை மக்களுக்கு ஏற்பட்டு விடாது. மக்கள் மனது திருந்த வேண்டும்.

ஆஸ்திகம் தோன்றிய நாள் முதல் நாஸ்திகமிருந்துவருகிறது. அறிவு இருக்கும்போது அஞ்ஞானமும் இருக்கத்தான் செய்யும். ஒன்றுக் கொன்று எதிரான சக்திகள் தோன்றுவது சகஜம். அது பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை அறியக் கூடாத விஷயத்தை மனம் வாக்குக்கு அப்பாற்பட்ட விஷயத்தை இல்லையென்று சொல்லாதே என்றுதான் நாம் கூறுகிறோம். அதனுடைய ரகசியம் தெரிந்து, உண்மையான உணர்வு அறிவு ஏற்படும்போது, ஒளி ஏற்பட்டு அந்த விஷயத்தை அனுபவிக்க முடியும். மற்றவர்கள் வாதம், பிரசாரம் செய்வது பற்றிக் கவலைப்படாமல் நாம் நல்ல மனிதர்களாக, தெய்வ பக்தியுள்ளவர்களாக இருந்து சந்தோஷமான வாழ்க்கை நடத்துவோம் என்பதில் சந்தேகமில்லை. நம் நாடு மகத்துவம் குறையாமல் இருந்து வருவதற்குக் காரணம் நம் தாய்மார்கள் இன்றும் கடவுள் பக்தியுடனிருப்பதுதான். இங்கிருப்பவர்கள் போன்ற மகான்கள் இருக்கிற வரை நம் நாட்டில்

தர்மலோபம், தர்மத்திற்குத் தடங்கல் ஏற்படாது. நமது முன்னேற்றம் தடைபடாது.

பிறகு ஸ்ரீ கே. எம். சுப்பிரமணியம் பேசினார். ஸ்ரீ இளவழகனார் பிறகு ஒரு சிறந்த சொற்பொழி வாற்றினார்.

* * *

தாதுப் பொருள்

சென்னை மாநிலத்தில் கிடைக்கும் "பாக்ஸைட்" எனும் அலுமினியத் தாதுப் பொருள்கள் மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை யென்றும், இத்தாதுப் பொருள்களைப் பயன் படுத்தினால், இங்கு ஒரு அலுமினியத் தொழிற் சாலையை லாபகரமாக நடத்தமுடியுமென்றும் நிதிமந்திரி திரு. சுப்பிரமணியம் கருத்தறிவிக்கிறார்.

* * *

தமிழ் இலக்கிய வரலாறு தொகுக்க முயற்சி

தமிழ் இலக்கியங்களை இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவும், சுமார் 300 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தக வடிவில் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றை எழுதவும் அண்ணாமலை நகர் தமிழ் மொழி இலக்கிய ஆலோசனைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

தமிழ் ஆங்கில மொழிகள் நன்றாகத் தெரிந்த வல்லுநர்களைக் கொண்டு ஷேக்ஸ்பியரின் நாவல்களைச் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்யவும் அது சிபார்சு செய்திருக்கிறது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குப் பின்னால் நெற்றியில் திருநீறு அணிந்த ஆயிரக்கணக்கான சைவத் திருமங்கையர்களும் சிவநேசச் செல்வர்களும் அணி அணியாக வந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது, இந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் உண்மை ஆத்திகமும், சமய நெறியும், திருவருளும் எவ்வளவு உயர்வாக ஓங்கியிருக்கின்றன என்பதற்குச் சிறந்த அத்தாட்சியாக அத் திருக்கூட்டம் விளங்கியது.

இந்தத் திருக்கூட்ட ஊர்வலத்துக்குச் சென்னை நகரசபை அங்கத்தினர் திருமதி திரிபுர சுந்தரி அம்மையார் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். ஊர்வலம் சென்ற வீதிகளில் எல்லாம் தண்ணீர் தெளித்துக் கோலம் இட்டிருந்தனர். ஆங்காங்கு மாவிலைத் தோரணம் கட்டியிருந்தனர். அந்தப் பேட்டையே பெரிய திருவிழாக் கோலத்துடன் பொலிந்தது. ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்த பக்த கோடிகள் பரவசத்துடன் சென்று கொண்டிருந்தனர். தேவாரத்தையும், திருவருட்பாவையும் இசையோடு பாடிக்கொண்டு சென்றனர். வீதிகளில் ஆங்காங்கே ஊர்வலம் நிறுத்தப் பட்டது. ஊர்வலத்தின் முன்னால் கையில் ஜாலராவைத் தட்டிக் கொண்டு, தேவாரம் பாடிக் கொண்டிருந்த ஆசிரியர் இளவழகனார் அவர்களுக்கு மலர் மாலை அணிவித்து மக்கள் மகிழ்ந்தனர். ஊர்வலம் சென்னை வண்ணையம்பதி பசுவையன் தெருவிலுள்ள ஸ்ரீ கபில விநாயகர் கோயிலைச் சென்றடைந்தது. கோயில் மரியாதைகளுடன் ஆசிரியர் இளவழகனார் அவர்களையும் அவருடன் வந்த பக்த கோடிகளையும் வரவேற்றனர்.

கபில விநாயகர் கோயில், வள்ளி அம்மையார் வழிபாட்டுக் கல்வி மண்டபத்தில் தியாகராயர் கல்லூரித் தலைவர் திரு எம். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் ஆசிரியர் இளவழகனார், திரு சச்சிதானந்தம் பிள்ளை முதலியவர்கள் பேசினார்கள். இறைவன் திருவருளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். பழைய புராண இதிகாசங்களின் சிறப்பைப் பக்திச் சுவையுடன் இனிக்க இனிக்கச் சொற்பொழி வாற்றினார்கள். ஒழுக்க நெறியின் உயர்வைப் பற்றி வலியுறுத்திக் கூறினார்கள்.

இந்தச் சமயத் தொண்டு வண்ணையம்பதியில் நடைபெறுவதற்கு அந்தப் பேட்டையைச் சேர்ந்த சிவத்திரு வள்ளியம்மையின் பேருக்கமும் பெருமுயற்சியும்தான் காரணம். அவர்கள் சைவ சமயத்துக்கு ஆற்றி வரும் தொண்டும், சமயப் பெருவிழாக்கள் நடக்கும் இடங்களில் சிவநேசர்களுக்கு விருந்து அளித்து வருவதும் பிரசித்தமானவை.

தெய்வத் தமிழகத்தில் தவநெறியும் திருவருளும் தழைத்தோங்க வேண்டும் என்று 'ஆலய வழிபாடும் தொண்டும்' செய்து வரும் மாம்பாக்கம் குருகுலத்தாரை, ஒவ்வொரு கோயில் தர்மகர்த்தாக்களும் பயன்படுத்திக்கொண்டால் நமது பழம் பெரும் சமய நெறிகள் செழித்தோங்கும்.

சென்ற பதினொரு வாரங்களாகச் சென்னைமா நகரத்தில் மாம்பாக்கம் குருகுலத்தார் செய்துவரும் தொண்டின் மூலம் இதை நன்கு உணர முடிகிறது.

—கல்கி.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்)